குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் - 1, ஒசூர்

முன்னிலை திரு.R.நரசிம்ம மூர்த்தி எல்எல்.பி.,

2026 ஆம் ஆண்டு மே மாதம் 19-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்:202/2022**

**CNR No. TNKI06-000023382022**

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>பேரிகை காவல் நிலையம்,<br>குற்ற எண். 480/2018 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | 1. ராஜன் த/பெ.கோவிந்தன் |
| குற்றப்பிரிவுகள் | இ.த.ச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் |
| குற்றம் வனையப்பட்டது | இ.த.ச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் |
| **வழக்கின் சுருக்கம்** | |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | 07.11.2018 |

| | |
|---|---|
| இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 10.08.2022 |
| குவிமுச பிரிவுகள் 240, 246, 252 ன் பிரகாரம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 09.11.2023 |
| பல்வகை மனு அதன் முடிவு | குற்றப்பல்வகை மனு எண்.375/2026 தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | 1) அ.சா.1 மு.வி. 15.05.2026<br>கு.வி. 15.05.2026<br>2) அ.சா.2 மு.வி.15.05.2026<br>கு.வி. 15.05.2026<br>3) அ.சா.3 மு.வி. 15.05 2026<br>கு.வி. 15.05 2026 |
| கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 18.05.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம். மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம், | - |
| மேல்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | - |
| தீர்மானம் மற்றும் முடிவு | 1. முடிவில் திரண்ட பயனிலிருந்தும் எதிரி இ.த.ச பிரிவுகள் 294 (b), 323, |

| | |
|---|---|
| | 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து எதிரியை குவிமுச பிரிவு 248 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எவ்வித |

| | |
|---|---|
| | உத்தரவும் இல்லை. |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக இன்று 19.05.2026 -ம் தேதி வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.V.கனிமொழி, அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாலகிருஷ்ணா அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு ஆவணங்களை பரீசிலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**தீர்ப்புரை**

1) கடந்த 04.11.2018 -ம் தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு நிகழ்நிலைப்புகார்தாரர் சரோஜா தான் எடுத்த புடவையை மாற்ற எதிரியினுடைய சரவணா ஜவுளி கடைக்கு சென்றபோது எதிரியான அந்த கடையின் ஓனர் ராஜன் (எ) ராஜா இது ஏற்கனவே எடுத்த புடவை கிடையாது. இது இரண்டு நாட்களுக்கு முன்பு வந்த புடவைதான், நீ புடவை ஏற்கனவே இங்கு எடுத்திருந்தா அந்த பில்லை கொண்டு வா தேவிடியா திருட்டு கண்டார ஓலி என்று அனைவர் முன்னிலையிலும் கெட்ட வார்த்தையால் திட்டியும், சரோஜாவின் முகத்தில் கையால் ஓங்கி அடித்தும், இனிமேல் இந்த கடைக்கு திருட வந்தால் உன்னை காலி பண்ணிடுவேன் என கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரி இதச பிரிவுகள் 294 (b),

323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம்புரிந்துள்ளதாக சூளகிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரிக்கு, இந்நீதிமன்றத்திலிருந்து குவிமுச பிரிவு 204 பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் எதிரி ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச 207 பிரிவின்படி இலவசமாக வழங்கப்பட்டன.

3) இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், இந்நீதிமன்றத்தால் குவிமுச 251 (1) பிரிவின்படி எதிரியின் மீது இதச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் கீழ் குற்றசாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை, பொய் வழக்கு என்று மறுத்துக் கூறினார்கள். எனவே, இருதரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. மேலும் இவ்வழக்கு நிலுவையின்போது, எதிரியும், அ.சா.1ம் ஊர்பஞ்சாயத்தார் முன்னிலையில் சமாதானம் ஆகிவிட்டதாக கூறி எதிரி தரப்பில் கடந்த 15.05.2026ஆம் தேதி கு.வி.மு.ச. பிரிவு 320 (1)-ன் கீழ் குற்ற பல்வகை மனு தாக்கல் செய்யப்பட்டது. இருப்பினும்,

இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சட்டப்படி சமரசமாக தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் அரசு வழக்கறிஞரின் கவனத்திற்கு பின் சமரச மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரான சரோஜா அ.சா.1 ஆகவும், நிகழ்நிலைப்புகார்தாரரின் கணவரும் கேட்டறிந்த சாட்சியுமான கோவிந்தராஜ் அ.சா.2 ஆகவும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.குமார் என்பவர் அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பு சாட்சிப்பட்டியலில் கண்ட 3 முதல் 6 ஆகியோர்களை விசாரணை செய்வதிலிருந்து இவ்வழக்கிலிருந்து விளக்களித்து அரசு தரப்பில் மேலொப்பம் செய்யப்பட்டு மேற்படி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

5) மேலும் அரசு தரப்பில் சமரச மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகவும், புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகவும், புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா-ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து, குவிமுச பிரிவு 313 (1) (b) ன் படி வினவியபோது, எதிரி பொய் சாட்சியம் என அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். மேலும் எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சியம் யாருமில்லை என்று கூறியதால், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய சான்றாவணங்கள் கவனமாக பரிசிலீக்கப்பட்டன.

8) இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுத்தரப்பில் எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா ? என்பதே ஆகும்.

9) **தீர்வு :-**

9 (i) அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரான அ.சா.1 சரோஜா கடந்த 05.12.2023ம் தேதி தனது முதல் விசாரணை சாட்சியத்தில், அரசு தரப்பு வழக்கிற்கு முறனாக சம்பவ தேதிக்கு 10 நாட்களுக்கு முன்பு எதிரியின் துணிக்கடையில் இரண்டு புடவை வாங்கி வந்ததில் ஒரு புடவை சேதமடைந்திருந்ததால் அதனை மாற்றிக்கொள்ள 04.11.2018ம் தேதி எதிரியின் கடைக்கு மதியம் 02.00 மணிக்கு சென்று பார்த்தபோது எதிரி கடையில் இல்லை அவருடைய மனைவிதான் கடையில் இருந்தார் என்றும் ஆகையால் புடவையை கையில் வைத்திருந்த கட்டைப்பையில் வைத்துவிட்டு வேறு துணிகளை எடுப்பதற்காக கடையில் பார்த்துக்கொண்டிருந்தபோது கடையில் வேலை செய்யும் நபர் என் கட்டைப்பையில் இருந்த புடவையைப் பார்த்து கடையில் இருந்து திருடி புடவையை மறைத்து வைத்துள்ளாயா என்று எதிரியின் மனைவியிடம் அழைத்துச் சென்றதாகவும், அப்போது எதிரியின் மனைவியிடம் நடந்ததைக் கூறியபோது அவர் அதற்கு ஒப்புக்கொள்ளாமல் கடையில் வேலை செய்யும் ஊழியரிடம் போனில் ஒளிப்பதிவு செய்துகொள்ள கூறினார் என்றும், மேலும் எதிரிக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அதன் அடிப்படையில்

எதிரியும் அவருடன் பெயர் தெரியாத மற்றொரு நபரும் சம்பவ இடத்திற்கு வந்து தனது வலது கன்னத்தில் கையால் அடித்ததாகவும், மேலும் எதிரியுடன் வந்த மற்றொரு நபர் என் தலைமுடியைப் பிடித்து அடித்தார் என்றும் மேலும் ஒளிப்பதிவு செய்ததை வலைதலத்தில் பதிவேற்றம் செய்ததாகவும், அப்பதிவினை தனது உறவினர் தனக்கு அனுப்பிவைத்ததாகவும், அப்பதிவினை மின்தகடில் பதிவிறக்கம் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன் என்றும், மேலும் தன்னை அடித்தவர்களை அடையாளம் காட்டுவேன் என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகவும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்தும் தெளிவாக சாட்சியமளித்துள்ளார் என்றும், இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியமளித்துள்ள சிறப்பு காவல் உதவி ஆய்வாளரான அ.சா.3 இவ்வழக்கின் நிகழ்நிலைப்புகார்தாரரால் அளிக்கப்பட்ட புகாரைப் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை அதிகாரியால் சாட்சிய சான்றாவணங்கள் சேகரித்து குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.3ன் சாட்சியத்தை அரசு சான்றாவணங்களான அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 ஆகியவை ஒத்திசைந்து அமைந்துள்ளது என்றும், இவ்வழக்குச் சம்பவமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகையால் எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு

பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு தக்க தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கவேண்டுமென்று வாதிட்டார்.

9 (ii) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில், நிகழ்நிலைப்புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரியைத் தெரியும் என்றும், புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், எதிரியும் தாங்களும் சமாதானமாகச் சென்றுவிட்டோம் என்றும் எனவே எதிரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்க விரும்பவில்லை என்று சமாதான மனுவில் கையெழுத்து செய்ததாகவும் மேலும் வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியமளித்துள்ளார் என்றும், மேலும் கேள்விப்பட்ட சாட்சியான நிகழ்நிலைப்புகார்தாரரின் கணவர் அ.சா.2ம் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முறனாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அதே போல் இவ்வழக்குச்சம்பவத்தைக் கண்ணுற்ற மற்றும் பார்வைமகஜர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால் மேற்படி வழக்குச்சம்பவமான சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் நடந்ததா என்கிற சந்தேகம் எழுகிறது என்றும், அ.சா.1ன் சாட்சியம்

எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ள சிறப்பு காவல் உதவி ஆய்வாளரான அ.சா.2ன் சாட்சியம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய போதுமானது அல்ல என்றும், எதிரிதான் மேற்குறிப்பிட்ட குற்றச்செயல்களை செய்தார் என்பதை நிரூபிக்கக்கூடிய நம்பதகுந்த சாட்சிகள் எதையும் அரசு தரப்பில் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தவில்லையென்றும், எனவே அரசு தரப்பில், எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கவேண்டுமென்றும் வாதிட்டார்.

9 (iii) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அ.சா.ஆ.3 புகார் மனு மற்றும் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையின்படி அரசு தரப்பு வழக்கானது கடந்த 04.11.2018 -ம் தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு நிகழ்நிலைப்புகார்தாரர் சரோஜா தான் எடுத்த புடவையை மாற்ற

எதிரியினுடைய சரவணா ஜவுளி கடைக்கு சென்றபோது எதிரியான அந்த கடையின் ஓனர் ராஜன் (எ) ராஜா இது ஏற்கனவே எடுத்த புடவை கிடையாது. இது இரண்டு நாட்களுக்கு முன்பு வந்த புடவைதான், நீ புடவை ஏற்கனவே இங்கு எடுத்திருந்தா அந்த பில்லை கொண்டு வா தேவிடியா திருட்டு கண்டார ஓலி என்று அனைவர் முன்னிலையிலும் கெட்ட வார்த்தையால் திட்டியும், சரோஜாவின் முகத்தில் கையால் ஓங்கி அடித்து இனிமேல் இந்த கடைக்கு திருட வந்தால் உன்னை காலி பண்ணிடுவேன் என கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் படி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

9 (iv) இவ்வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரான சரோஜா என்பவர் அ.சா.1 ஆக கடந்த 05.12.2023ம் தேதி தனது முதல் விசாரணை சாட்சியத்தில், அரசு தரப்பு வழக்கிற்கு முறனாக சம்பவ தேதிக்கு 10 நாட்களுக்கு முன்பு எதிரியின் துணிக்கடையில் இரண்டு புடவை வாங்கி வந்ததில் ஒரு புடவை சேதமடைந்திருந்ததால் அதனை மாற்றிக்கொள்ள 04.11.2018ம் தேதி எதிரியின் கடைக்கு மதியம் 02.00 மணிக்கு சென்று பார்த்தபோது

எதிரி கடையில் இல்லை அவருடைய மனைவிதான் கடையில் இருந்தார் என்றும், ஆகையால் புடவையை கையில் வைத்திருந்த கட்டைப்பையில் வைத்துவிட்டு வேறு துணிகளை எடுப்பதற்காக கடையில் பார்த்துக்கொண்டிருந்தபோது கடையில் வேலை செய்யும் நபர் என் கட்டைப்பையில் இருந்த புடவையைப் பார்த்து கடையில் இருந்து திருடி புடவையை மறைத்து வைத்துள்ளாயா என்று எதிரியின் மனைவியிடம் அழைத்துச் சென்றதாகவும், அப்போது எதிரியின் மனைவியிடம் நடந்ததைக் கூறியபோது அவர் அதற்கு ஒப்புக்கொள்ளாமல் கடையில் வேலை செய்யும் ஊழியரிடம் போனில் ஒளிப்பதிவு செய்துகொள்ள கூறினார் என்றும், மேலும் எதிரிக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அதன் அடிப்படையில் எதிரியும் அவருடன் பெயர் தெரியாத மற்றொரு நபரும் சம்பவ இடத்திற்கு வந்து தனது வலது கன்னத்தில் கையால் அடித்ததாவும், மேலும் எதிரியுடன் வந்த மற்றொரு நபர் என் தலைமுடியைப் பிடித்து அடித்தார் என்றும், மேலும் ஒளிப்பதிவு செய்ததை வலைதலத்தில் பதிவேற்றம் செய்ததாகவும், அப்பதிவினை தனது உறவினர் தனக்கு அனுப்பிவைத்ததாகவும், அப்பதிவினை மின்தகடில் பதிவிறக்கம் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன் என்றும், மேலும் தன்னை அடித்தவர்களை அடையாளம் காட்டுவேன் என எதிரிக்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.1 கடந்த 15.05.2026ம் தேதி தனது

முதல் விசாரணை தொடர்ச்சியில் எதிரியும் தாங்களும் சமாதானமாகச் சென்றுவிட்டதால் எதிரி மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்கவேண்டாமென்று சமாதான மனுவில் கையெழுத்து செய்ததும், காவல் துறையினர் தன்னை விசாரிக்கவில்லையென்றும், அரசுக்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1யை எதிரி தரப்பில் குறுக்கு விசாரனை செய்தபோது புகார் மனுவில் உள்ள விவரங்கள் போலிசார் சொன்னதன்படி தான் எழுதியதாகவும், தான் 05.12.2023ம் தேதி முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களையும் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் சொன்னதாகவும், புகார் மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லையென்று ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, அ.சா.1 ன் சாட்சியம் முன்னுக்குப்பின் முறனாகவும், நம்பகத்தன்மையற்றும் அமைந்துள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9 (v) மேலும் நிகழ்நிலைப்புகார்தாரின் கணவரான அ.சா.2ம் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு முறனாக பிறழ்சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2யை பிறழ்சாட்சியமாக கருதி அரசு

தரப்பில் குறுக்கு விசாரணை செய்துள்ளபோதும், அவர்களிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மேலும் இவ்வழக்கின் கண்ணுற்ற மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எனவே, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அ.சா.1 மற்றம் அ.சா.2ன் சாட்சியங்கள் நிரூபணம்செய்யவில்லையென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9 (vi) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்காக அரசு தரப்பில் சூளகிரி காவல் நிலைய தற்போதைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குமார் அ.சா.3 ஆக விசாரித்து அவர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். இருப்பினும் அ.சா.3ன் சாட்சியத்தை அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியங்கள் பொய்ப்பிப்பதால் அ.சா.3ன் சாட்சியம் நம்பத்தகுந்த போதுமான சாட்சியமில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிய சாண்றாவணங்களை கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லையென்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகையால்

சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக பாவித்து எதிரியின் மீது இதச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் கீழ் குற்றாவாளி அல்ல என்றே இந்நீதிமன்றம் இவ்வழக்கில் எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

9 (vi) முடிவில் திரண்ட பயனிலிருந்தும் எதிரி இதச பிரிவுகள் 294 (b), 323, 506 (i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டம் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றத்திலிருந்து எதிரியை குவிமுச பிரிவு **248 (1)** ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எவ்வித உத்தரவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு

இன்று 2026-ம் ஆண்டு மே மாதம் 19-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.19 19:32:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

ஒசூர்

**குறிப்பு**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3). இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**பின் அட்டவணை**

**1. குற்ற முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| **வ. எண்** | **சாட்சியின் பெயர்** | **சாட்சியின் வரிசை** |
|---|---|---|
| 1. | திருமதி.சரோஜா | அ.சா.1 |
| 2. | திரு.கோவிந்தராஜ் | அ.சா.2 |
| 3. | திரு.குமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், சூளகிரி காவல் நிலையம் | அ.சா.3 |

2). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்

| வ. எண் | ஆவண விவரம் | சான்றாவண வரிசை |
|---|---|---|
| 1. | சமரச மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து | அ.சா.ஆ.1 |
| 2. | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து | அ.சா.ஆ.2 |
| 3. | புகார் மனு | அ.சா.ஆ.3 |
| 4. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.ஆ.4 |
| 5. | மாதிரி வரைபடம் | அ.சா.ஆ.5 |
| 6. | பார்வை மகஜர் | அ.சா.ஆ.6 |

3). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்று பொருட்கள் பட்டியல்

| வ.எண் | சான்று பொருள் விவரம் | சான்று பொருள் வரிசை |
|---|---|---|
| - | - | - |

4). எதிரிகள் தரப்பு சாட்சிகள் பட்டியல்

| வ.எண் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வரிசை |
|---|---|---|
| - | - | - |

5). எதிரிகள் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்

| வ.எண் | தேதி | ஆவண விவரம் | சான்றாவண வரிசை | தன்மை |
|---|---|---|---|---|
| - | - | - | - | - |

NARASIMMA MOORTHI Digitally signed by NARASIMMA MOORTHI Date: 2026.05.19 19:32:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

ஒசூர்

**நகல்:** மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.